பக்கங்கள் 13+6

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 13 திங்கட்கிழமை 29.07.2024 அதிர்வு 363

## நீரில் மூழ்கி சிறுவன் பலி

### அவிசாவளையில் சோகம்

(எம்.எப்.எம். அலி)

நீரில் மூழ்கி 17 வயதுடைய சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தப் பரிதாப சம்பவம் நேற்று 04



## ரயில் முன் பாய்ந்து ஒருவர் உயிர்மாய்ப்பு

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற இரவு நேர அஞ்சல் ரயில் முன் பாய்ந்து ஆண் ஒருவர் உயிரிழந்தார் என்று ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

ரயிலின் இயந்திரத்தின் முன் ஒருவர் பாய்ந்தார் என்று ரயில் சாரதி ஹட்டன் பொலிஸ் நிலையத்துக்குத் தெரிவித்தார் என்று ஹட்டன் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். 04

## அடையாளம் தெரியாத ஆணின் சடலம் மீட்பு!

சீதுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிதிகொட பகுதியில் தடுகம் ஓயாவில் ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லைஎன்றுசீதுவைபொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாகமீட்கப்பட்டவர்45முதல் 50 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் 5 அடி 10 அங்குலம் 04



# அமைச்சுப் பதவியை துறந்தார் விஜயதாஸ

### ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாலேயே இந்த முடிவை எடுத்தார் என்று அவர் அறிவிப்பு

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தனது அமைச்சுப் பதவியை இன்று இராஜினாமா செய்தார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சுப் பதவியைத் தான் இராஜினாமா செய்கின்றார் என்று அவர் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடுவதாலேயே இந்த முடிவை எடுத்தார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 20 கிலோ கஞ்சாவை டிப்பரில் கடத்தியவர் கைது!

(த.சுபேசன்)

இருபது கிலோகிராம் கஞ்சா போதைப்பொருளை டிப்பர் வாகனத்தில் கடத்தி வந்த நபர் ஒருவர் நேற்று விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

முல்லைத்தீவுப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிக் கடத்தப்படவிருந்த கஞ்சாவே சங்குப்பிட்டிப் பகுதியில் விசேட அதிரடிப் படையினரின் சோதனையின்போது கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது கைதான நபர், கஞ்சா போதைப்பொருள் மற்றும் வாகனம் ஆகியவற்றைச் சாவகச்சேரிப் பொலிஸாரிடம் விசேட அதிரடிப் படையினர் பாரப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





# கணித செயற்பாட்டு வகுப்பறை திறப்பு

(நடராஜா மலர்வேந்தன்)

வன்னியோப் அமைப்பினரின் கல்வி திறன் மேம்பாட்டு செயற்றிட்டத்தின் கீழ் பசறை, கோணக்கலை தமிழ் ஆரம்ப பாடசாலையில் இன்று (29) கணித செயற்பாட்டு வகுப்பறை திறந்துவைக்கப்பட்டது.

இதன்போது அமைப்பினரால் பெறுமதிமிக்க கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பசறை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. ஸ்ரீனா பேகம், உதவி கல்வி பணிப்பாளர் கவிதாஞ்சலி, வன்னியோப் அமைப்பின் பணிப்பாளர்கள், ரஞ்சன் சிவ ஞானசுந்தரம், தில்லைராஜ் வள்ளுவன், செயலாளர் மாலதி, இணைப்பாளர் காண்டிபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.









# விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை மண்முனை தெற்கில் ஆரம்பித்த ஆளுநர்

(அஸ்ஹர் இப்றாஹிம்)



மட்டக்களப்பு, மண்முனை தெற்கில் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆரம்பித்து வைத்தார்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் தொலைநோக்கு பார்வையின் கீழ் விவசாயம் மற்றும் விவசாயிகளை அபிவிருத்தி செய்வதற்கான விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மட்டக்களப்பு மண்முனை தெற்கில் ஆரம்பித்து வைத்தார்.

விவசாயச் சங்கங்கள் தங்களுடைய மரக்கறிகள் மற்றும் பழங்களை சேமித்து வைத்து நல்ல விலையைப் பெறமுடியும் வகையில் மண்முனை தெற்கில் குளிர்சாதனக் கிடங்குகள் ஆளுநரால் திறந்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வியாழேந்திரன் உட்பட அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



# பல லட்சம் ரூபா பெறுமதியான உதவிகள் சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கல்!

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு, சந்நிதியான் ஆச்சிரமத்தால் முத்துஜயன்கட்டு ஜீவநகர் அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கும் 52 மாணவர்களுக்கு சீருடை துணி வழங்கப்பட்டது.

அத்துடன் அங்கு முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான மலசலகூடம் ஒன்றும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இதனைச் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாக சென்று வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் கிராம மக்கள், மாதர் சங்க நிர்வாகிகள், சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், சமூகசெயற்பாட்டாளர் இ.தயாபரன் என பலரும் கலந்து கொண்டனர்.



இதேவேளை, குடி தண்ணீர் இன்றி பல காலமாக சிரமத்துக்கு உள்ளாகியிருந்த ஒட்டுசுட்டான் பரசங்குளம் மக்களுக்கு ஏற்கனவே கட்டப்பட்ட கிணறு தண்ணீர் இன்றிக் காணப்பட்ட நிலையில், அதனை 3 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியில் சீர்செய்து மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில் 16 குடும்பங்கள் பயன் பெற்றவுள்ளனர்.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் இடம் பெறும் வாராந்த நிகழ்வில் சுயதொழில் முயற்சிக்காக ஆவரங்கால் மேற்கு , புத்தூரைச் சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றுக்கும் மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரியை சேர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கும் தலா 75 ஆயிரம் ரூபா வீதம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம் பெற்ற இந்தத வாராந்த நிகழ்வில் ஆன்மீக உரையைச் சைவப்புலவரும், ஆசிரியருமான தவத்திரு இ. திருமாறக்குருக்கள் நிகழ்த்தினார். இதில் சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர்கள், நிர்வாகிகள், சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், பக்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.







# 42 இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நாளை வரை நீடிப்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 42 இந்திய மீனவர்களின் வழக்குகள் இன்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அனைவரினதும் விளக்கமறியலும் நாளை வரை நீடிக்கப்பட்டது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டவேளை பல்வேறு தினங்களில் கைதான இந்திய மீனவர்கள் 42 பேரின் வழக்குகளே இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதேவேளை, கடந்த ஜூன் மாதம் 22ஆம் திகதி கைதான மேலும் 22 இந்திய மீனவர்களின் வழக்குகளும் நாளை இதே நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகின்றது.

இதன் மூலம் நாளை 64 இந்திய மீனவர்களின் வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

# யாழ். இந்து ‘08’ பிரிவு மாணவர்களால் உதவி



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 2008ஆம் ஆண்டு பிரிவு – பழைய மாணவர்களால் திருநெல்வேலியிலுள்ள சிறுவர் இல்லத்துக்குக் கடந்த சனிக்கிழமை உதவி வழங்கி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில், 2008ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரம் கற்ற மாணவர்கள், “மீண்டும் பள்ளிக்குச் செல்வோம்“ என்னும் தொனிப் பொருளில் தமது ஒன்றுகூடலை, யாழ். நகரிலுள்ள விடுதியில் கடந்த ஏப்ரல் மாதம் நடத்தியிருந்தனர். இதன்போது தமக்குக் கற்பித்த ஆசிரியர்களுக்கும் மதிப்பளித்திருந்தனர்.

ஒன்றுகூடலின் ஓர் அங்கமாக சமூக நலத் திட்டமும் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கு அமைவாக திருநெல்வேலியிலுள்ள கருணாலயம் பெண்கள் சிறுவர் இல்லத்தின் கோரிக்கைக்கு அமைவாக ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆடைகள் வழங்கப்பட்டன. அத்துடன் சிறுவர் இல்லத்துக்கு மதியபோசனத்துக்கு 50 ஆயிரம் ரூபாவும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர் இ.செந்தில்மாறன் பங்கேற்றிருந்தார். அவர் உத்தியோகபூர்வமாக ஆடைகளை, இல்லத்தினரிடம் கையளித்ததுடன், 2008ஆம் ஆண்டு பிரிவு மாணவர்களால் சிறுவர் இல்லப் பிள்ளைகளிடம் அவை ஒப்படைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட யாழ். இந்துக் கல்லூரி அதிபர் இ.செந்தில்மாறன், பாடசாலை மாணவிகளின் சுயகற்றலுக்குத் தேவையான உதவிகள் வழங்குவதாகக் கூறியதுடன், பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**அடையாளம்...**

உயரம் உடையவர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சடலம், நீர்கொழும்பு வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சீதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**ரயில் முன் பாய்ந்து..**

உயிரிழந்தவரின் அடையாளம் இது வரை உறுதிப்படுத்தப்படவில்லை.

சடலம் ஹட்டன் ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக திக் ஓயா ஆரம்ப வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்குமாறு மரண விசாரணை அதிகாரி ஹட்டன் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

**நீரில் மூழ்கி...**

மாலை அவிசாவளை, நாச்சிமலை நீரோடையின் கோனவல பகுதியில் இடம் பெற்றுள்ளது என்று அவிசாவளை பொலிஸார் தெரிவித்தனர்.

கஹதுடுவ, பொல்கஸ்ஹோவிட்ட பலகம பிரதேசத்தைச் சேர்ந்த சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக இரத்தினபுரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.













# மக்கள் காங்கிரஸின் புத்தளம் மாநாடு!

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் புத்தளம் மாவட்ட எழுச்சி மாநாடு சனிக்கிழமை (27) புத்தளம் பிரதான வீதியில் முன்னாள. நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். நவவி தலைமையில் இடம்பெற்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதன் போது, கட்சியின் அரசியல் அதிகாரசபை உறுப்பி னர்கள், உயர்பீட உறுப்பினர்கள், புத்தள மாவட்ட முக்கியஸ் தர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்டோருடன் பெரும் திரளான பொது மக்கள் இவ் எழுச்சி மாநாட்டில் கலந்துகொண்டனர்.







நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வித்தியாசமான தேர்தல்

இந்த ஜனாதிபதி தேர்தல் பல வகையிலும் முன்னையவற்றிலிருந்து வேறுபட்டது.

கடந்த இருபது ஆண்டுகளில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தல்களில் ராஜபக்ஷக்கள் நேரடியாக வேட்பாளராகக் களமிறங்காத முதல் தேர்தல் இது.

முந்திப் பிந்தி அரசியலை எதிர்கொண்ட அனுபவமே இல்லாத - பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களின் கிளைக்குழுத் தேர்தலைக் கூட சந்தித்தேயிராத - கோட்டாபய ராஜபக்ஷவை நேரடியாக நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவிக்கு நிறுத்தி, ஆரவார ஏற்பாடுகளுடன் அவரை ஜனாதிபதியாக்கி, அதேபோல சரித்திரத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வெற்றியையும் பெற்றுக் கொடுத்து, அந்த வெற்றி மூலம் அரசமைப்பை திருத்தி - மாற்றி - நிறைவேற்றதிகாரத்தை கட்டுமட்டுமில்லாமல் வாரி வழங்கியதின் விளைவை, இப்படித் தேர்தலில் போட்டியிடாமல், அஞ்ஞாத வாசத்தோடு காத்திருக்கும் தண்டனையாக ராஜபக்ஷக்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது என்றால் அது மிகையில்லை.

வெல்ல முடியாத விடுதலைப் புலிகளை போரில் தோற்கடிக்கச் செய்து, தென்னிலங்கை சிங்களத்தின் நிரந்தரப் பாதுகாவலர்களாகவும், தேசியதலைவர்களாகவும் உருவெடுத்த ராஜபக்ஷக்களை, அவர்களைச் சுற்றி விஸ்வரூபமாக வளர்ந்த ஊழல், அரச சொத்துச்சூரையாடல், மோசமான அரசு நிர்வாகம் போன்றவை எல்லாம் சேர்ந்து இன்று அரசியலில் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கக் கூட முடியாத இக்கட்டை ஏற்படுத்தி நிற்கின்றன.

வழமையான ஜனாதிபதி தேர்தலுடன் ஒப்பிடுகையில் இந்த ஒன்பதாவது ஜனாதிபதி தேர்தல் முன்னைய எட்டு தேர்தல்களினின்றும் ஒரு விடயத்தில் வேறுபட்டு நிற்கின்றது.

முன்னைய தேர்தல் ஒவ்வொன்றிலும் பல வேட்பாளர்கள் போட்டியிட்டாலும், உண்மையான போட்டி பிரதான வேட்பாளர்கள் இருவருக்கு இடையில்தான் என்றிருந்தது.

அதனால் நடந்து முடிந்த எட்டு தேர்தல்களிலுமே வெற்றி பெற்றவர் ஐம்பது வீதத்திலும் அதிகமான வாக்குகளைப் பெற, இரண்டாவது சுற்று வாக்கு எண்ணிக்கை கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய தேவை வரவில்லை.

ஆனால், இம்முறை அப்படி இருக்காது என்பது வேட்பு மனுத் தாக்கலுக்கு முன்னரே பெரும்பாலும் தெளிவாகி விட்டது.

குறைந்தபட்சம் மும்முனை அல்லது அதையும் தாண்டி நான்கு முனைப்போட்டி என்ற நிலைமைதான் என்பது பெரும்பாலும் உறுதியாகியுள்ளது.

அதுமட்டுமல்ல, இந்த மூன்று, நான்கு பிரதான வேட்பாளர்களில் எவரும் தனித்து ஐம்பது வீத வாக்குகளைப் பெற வாய்ப்பே இல்லை என்பதும் -

அதனால் இரண்டாம் சுற்று வாக்களிப்பு தவிர்க்க முடியாத நிச்சயம் என்பதும் கூட இப்போதே பெரும்பாலும் உறுதியாகி விட்டது.

இந்தப் புற சூழலில், தேர்தலில் வாக்களிக்கும் மக்களுக்கு அவர்களது கருத்து நிலைப்பாடு தேர்தலில் உச்ச அளவுக்கு பிரதிபலிக்கப்படுவதற்காக இந்த தேர்தல் முறைமையில் இரண்டாவது, மூன்றாவது தெரிவு வாக்குகள் குறித்தெல்லாம் தெளிவான அறிவூட்டல்களை வழங்க வேண்டிய தேவையும் கட்டாயமும் இம்முறை எழுந்திருக்கின்றது.

அந்தத் தெளிவூட்டலில் பொது அமைப்புகளோ, தேர்தலில் பங்குபற்றும் தரப்புகளோ, தேர்தல் ஆணையமோ இன்னமும் முழு அளவில் இறங்கின என்று கூறுவதற்கில்லை.

இரண்டாம், மூன்றாம் தெரிவு பற்றிய வாக்களிப்பு முறைமை வாக்காளர்களுக்கு உரிய முறையில் - புரியத்தக்க விதத்தில் - அறிவுறுத்தப்படாவிட்டால், தேர்தலில் பழுதடையும் வாக்குகளின் எண்ணிக்கை எல்லை மீறி, மக்களின் உண்மையான கருத்து நிலைமையை வெளிப்படுத்தாத தேர்தலாக அது மாறிவிடும் ஆபத்து உண்டு.

இப்படி எந்த வகையில் பார்த்தாலும் முன்னைய ஜனாதிபதி தேர்தல்களுக்கு முற்றிலும் வித்தியாசமானது இந்தத் தேர்தல் என்பது சரியானதுதான்.





# அக்கரைப்பற்று வலய மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் திட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அக்கரைப்பத்து கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் தரம் 10 மற்றும் தரம் 11 இல் கல்வி பயிலும் மாணவர்களது பரீட்சை பெறுபேறுகளை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு வணிகக் கற்கைகள் மற்றும் கணக்கியல் ஆசிரியர்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான செயலமர்வொன்று அண்மையில் இடம்பெற்றது.

ஆசிரியர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாணவர்களைச் சிறப்பாக ஈடுபடுத்துவதற்கும் அவர்களின் கல்வி முடிவுகளை உயர்த்துவதற்கும் மேம்பட்ட உத்திகள் இதன் போது பரிமாறப்பட்டன.

வளவாளர்களாகத் தென்கிழக்கு பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீட பேராசிரியர்களான எம்.ஐ.எம்.ஹிலால், எம்.ஸீ.அப்துல் நாஸர் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.





# சிறு முயற்சியாளர்களுக்கான சந்தை அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில்!

(எம் எப். நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவால் உள்ளூர் தொழில் முயற் சியாளர்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு சுறு சந்தை நிகழ்வானது இன்று (29) திங்கட்கிழமை பிரதேச செயலக வளாகத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வை உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபிர் ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வின் போது கணக்காளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி முகாமையாளர் மற்றும் காரியாலய உத்தி யோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



இங்கு தொழில் முயற்சியாளர்களின் பொருள்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் அவர்களது தொழிலை எதிர்காலத்தில் மேம்படுத்துவதற்கு உதவியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.


குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998

# சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் வித்தியாலய மாணவி மாவட்ட மட்ட போட்டிக்குத் தெரிவு

(எஸ்.அஷ்ரப்கான்)

2024 நடைபெற்ற வலய மட்டத்திலான தமிழ் மொழித் தினப் போட்டியில் சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் வித்தியாலய மாணவி கே.எப். நிஸ்கா முதலாம் பிரிவுக்கு உரிய வாசிப்புப் போட்டியில் கலந்து கொண்டு முதலாமிடத்தை பெற்று மாவட்ட மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

முதன்முதலாக இந்த் மாணவி இந்தச் சாதனையை நிலை நாட்டியமைக்காகப் பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர் மற்றும் ஆசிரியர்கள் இம்மாணவியைப் பாராட்டியுள்ளனர்.

அண்மைக் காலமாக இந்தப் பாடசாலை யின் அதிபர் ஜனாப்.எம்.ஐ.சம்சுதீன் தலை மையில் பல்வேறு வெற்றிகளை கல்வி மற்றும் இணைப்பாடவிதானம் ரீதியாக இப்பாடசாலை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







# ஆரம்ப மாணவர்களின் சந்தை!

(பழுவூரான்)

மட்டக்களப்பு புதுமுகத்துவாரம் புனித இக்னேசியஸ் வித்தி யாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களின் சந்தை நிகழ்வு வித்தியாலய அதிபர் பி.தங்கவேல் தலைமையில் இன்று திங்கட்கிழமை (29) வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது மாணவர்களினால் பல்வேறு வகையான காய்கறிகள், இலக்கறி வகைகள் மற்றும் தின்பண்டங்கள் விற்பனை செய்யப்பட்டன. இதில் கலந்து கொண்ட மாண வர்கள் பொருள்களைக் கூவி விற்றதோடு, கொடுக்கல் வாங்கல் செய்ததையும் காண முடிந்தது.





# யானையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அட்டாளைச்சேனையயில் நஷ்ட ஈடு வழங்கல்

(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அட்டாளைச்சேனை, பாலமுனைக் கிராமத்தில் யானைதாக் கியதில் சில குடும்பங்களின் வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டன.

அந்த வகையில் அரச சுற்று நிருபத்துக்கு அமைய அரச நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவாக வனப் பரிபாலன திணைக் களத்தால் நேற்று (28) அந்தக் குடும்பங்களுக்கான காசோ லைகள் அட்டாளைச்சேனை பிரதேச செயலக அனர்த்தப் பிரிவால் அபிவிருத்தி உத்தியோகத்தர் பங்கு பற்றலுடன் பிரதேச செயலாளர் பீ.டி.எம். இர்பான் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் கெ.வி.சலீம் ஆகியோரால் வழங்கப்பட்டன.

இந்தத் தொகையானது வீடுகளின் சேதத்தை பெறுத்து வழங்கப்பட்டது.



# பனம்பொருள் கைப்பணி உற்பத்திகள்; புலம்பெயர் உதவியுடன் பயிற்சி நெறி!

(வி.ரி. சகாதேவராஜா)

புலம்பெயர் உறவுகளின் அனுசரணையில் திருக்கோவில் பிரதேச செயலகத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட சங்கமன் கிராமத்தில் பனம் பொருள் கைப்பணி உற்பத்திகள் மூலமாக வாழ்வாதாரத்தை உயர்த்தும் பயிற்சி நெறி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சங்கமன் கிராமத்தில் 40 பயனாளர்களுடன் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனின் ஏற்பாட்டிற்கமைய இந்த வாழ்வாதாரப் பயிற்சி நெறியானது இன்றுவரை மிகவும் முன்னேற்றகரமாக நடைபெற்று வருகின்றது.

இதேபோன்று ஏனைய சில கிராமங்களிலும் இத்தகைய பயிற்சி நெறி எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த வாழ்வாதார பயிற்சி நெறியானது 2 மாத கால எல்லையைக் கொண்டதாகும்.









# சூரிய மின் உற்பத்தியை விஸ்தரிக்கும் திட்டத்துக்கு எதிராக மக்கள் போராட்டம்

(வவுணதீவு நிருபர்)

மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசத்தில் சூரிய மின் உற்பத்தியை விஸ்தரிக்கும் திட்டத்துக்கு எதிராக கிராம மக்கள் மண்முனை மேற்கு பிரதேச செயலகத்துக்கு முன்பாக இன்று திங்கட்கிழமை (29) போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நாவற்காடு கிராமத்தில் கடந்த 2022 ஒக்ரோபர் மாதம் திறக்கப்பட்டு இயங்கி வரும் சூரிய சக்தி மின் உற்பத்தி (சோலார் பவர்) நிலையம் மேலும் பல மடங்கு விஸ்தரிக்கப்படவிருப்பதாக கூறி சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையயத்தை அண்டிய கிராம மக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தச் சூரிய மின் உற்பத்தியை விஸ்தரித்தால் தமது விவசாய நிலங்களுக்கும், குடியிருப்புக்களுக்கும் கிராம மக்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என தெரிவித்து இதன் போது தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இந்த விஸ்தரிப்பு திட்டத்தினை நிறுத்தக் கோரி பிரதேச செயலாளருக்கு மகஜர் ஒன்றையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கையளித்தனர்.









# மாணவத் தலைவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஸ்றப் வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் எம்.ஐ.சம்சுதீனின் ஆலோசனையிலும் வழிகாட்டல், பாடசாலை இணைப் பாடத்துக்குப் பொறுப்பான உதவி அதிபர் எம்.எப்.றிஸ்வி ஹாதீமின் ஒருங்கிணைப்பிலும் பாடசாலை ஒழுக்காற்றுப் பிரிவினரால் மாணவத் தலைவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி வழங்கப்பட்டது.

இந்தத் தலைமைத்துவ பயிற்சியில் கல்முனை சாஹிறா தேசிய கல்லூரி ஆசிரியர் மேஜர்.கே.எம்.தமீம் பிரதான வளவாளராக கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் பாடசாலையின் ஒழுக்காற்றுப் பிரிவு பொறுப்பாசிரியர் எம்.எப்.எம். றிபாஸ், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் என்.எம்.ஏ.ஆபாக் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# சிறுபோக அறுவடை ஆரம்பம்!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சின்ன விசாரை இடைக்கண்டத்தில் சிறுபோக வேளாண்மை செய்கையின் அறுவடை நிகழ்வு சனிக்கிழமை (27) சின்ன விசாரை வயல் கண்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சின்ன விசாரை இடைக் கண்ட குழுவின் தலைவர் அப்துல் மஜீத் ஜே.பி. தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், சம்மாந்துறை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி பில்கஜன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இதன்போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சம்மாந் துறை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறுப் பதிகாரி பில் கஜனுக்கு சின்ன விசாரை இடைக் கண்ட குழு தலைவர் அப்துல் மஜீத் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.



இந் நிகழ்வில், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் முகம்மது பைசல், சின்ன விசாரை இடைக் கண்ட நிர்வாக சபையின் கணக்குப் பரிசோதகர் பொறி யியலாளர் என்.எம். நழீம், சின்ன விசாரை இடைக் கண்ட நிர்வாக சபை யின் செயலாளர் அப்துல் வாசித், பொரு ளாளர் எம்.எச்.எம். அர்சாத், வட்டவித ானை எம்.ஏ. அமீர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள், விவசாயிகள், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# அம்பாறையில் இன்று சஜித்தின் எட்டு கூட்டங்களும் ரத்தாகின!

( வி.ரி.சகாதேவராஜா)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று திங்கட்கிழமை அம்பாறை மாவட்டத்தில் கலந்து கொள்ள இருந்த எட்டு கூட்டங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

சக்வெல வேலைத் திட்டத்தின் கீழ் பின்தங்கிய பிரதேசத்தைச் சேர்ந்த எட்டு பாடசாலைகளுக்கு சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான ஸ்மார்ட் அறைக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுகளே இவ்விதம் ரத்து செய் யப்பட்டுள்ளன என்று சஜித் பிரேம தாசாவின் இணைப்பாளர் வி. வினோகாந்த் ஊடகங்களுக்கு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



முன் கூட்டியே இந் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஜனாதிபதி தேர்தல் விதிமுறைகளுக் கமைவாக இந் நிகழ்வுகள் ரத்து செய்யப்பட்டது.

அதாவது தேர்தல் ஆணையகத் தினால் ஜனாதிபதி தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பிற்பாடு இத்தகைய நிகழ்வை நடத்துவது பொருத்தமற்றது என்ற காரணத்தால் இது ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவித்தார்.

அம்பாறையில் இருந்து தேர்தல் ஆணைக்குழுவுக்கு சென்ற முறைப்பாட்டை அடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

ஏழை மாணவர்களுக்காக இத் தகைய கல்வி உதவி வழங்கப்பட இருந்த இந்த நிகழ்வைத் தடை செய்த வர்கள் நாளை ஆட்சிக்கு வந்தால் இந்த கல்வியின் தலைவிதி எவ்வாறு தீர்மானிக்கப்படும் என்று தெரியாது. – என்றார்.

# பஞ்சாப்பில் பொலிஸ் நிலையத்தை சூறையாடிய பொதுமக்கள் கூட்டம்!



லூதியானா,ஜுலை29

பஞ்சாப்பில் பொலிஸ் நிலையம் ஒன்றைச் சூறையாடிய பொதுமக்கள் சப்-இன்ஸ்பெக்டரை சரமாரியாக தாக்கினர்.

பஞ்சாப் மாநிலம் லூதியானா மாவட்டத்தில் உள்ள ஷிங்கர் பகுதியில் பொலிஸ் நிலையமும் அதன் அருகிலேயே பொலிஸ் சோதனை சாவடியும் அமைந்துள்ளன. நேற்று முன்தினம் இரவு அங்கு பணியில் இருந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளில் வந்த உள்ளூர் வியாபாரி ஒருவரை தடுத்து நிறுத்தினர்.

இரு சக்கர வாகனத்தில் அதிவேகத்தில் வந்தார் எனக் கூறி அந்த வியாபாரியை பொலிஸார் கண்டித்தனர். அப்போது வியாபாரிக்கும் பொலிஸாருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனையடுத்து, பொலிஸார் அந்த வியாபாரியை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்றனர். ஆனால் அவர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்.

சில மணி நேரத்துக்கு பிறகு அந்த வியாபாரி 100-க்கும் மேற்பட்ட மக்களுடன் பொலிஸ் நிலையத்துக்கு வந்தார். பின்னர் அந்த கும்பல் பொலிஸ் நிலையத்துக்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த பொருள்களை அடித்து நொறுக்கியது.

மேலும் அங்கு பணியில் இருந்து சப்-இன்ஸ்பெக்டரையும், மற்றொரை பொலிஸ்காரரையும் அந்த கும்பல் சரமாரியாக தாக்கியது. இதில் இருவரும் பலத்த காயம் அடைந்தனர்.

பொலிஸ் நிலையத்தை சூறையாடிவிட்டு அந்த கும்பல் அங்கிருந்து தப்பி சென்றது. இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மழை தீவிரமானதால் காவிரி நீர் திறப்பு வெள்ளக்காடாகின தமிழக எல்லைகள்



தென்மேற்குப் பருவமழை தீவிரடைந்ததால், கர்நாடகவின் ஹேமாவதி, ஹாரங்கி, கபினி, கே.ஆர்.எஸ். அணைகள் நிரம்பி காவிரி ஆற்றில் நீர் திறக்கப்பட்டுள்ளது.

நேற்று கபினி அணையிலிருந்து, விநாடிக்கு, 35 ஆயிரம் கன அடி, கே.ஆர்.எஸ். அணையிலிருந்து ஒரு லட்சத்து முப்பதாயிரத்து 867 கன அடி என, ஒரு லட்சத்து 65 ஆயிரத்து 867 கன அடி நீர் காவிரியிலிருந்து வெளியேற்றப்பட்டது.

இதனால் தமிழக எல்லையான பிகுண்டுலுவில் நேற்று மாலை 1.60 கன அடி நீர் வரத்தானது.

அத்துடன், வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, ஐந்தருவி, ஐவர்பாணி, சினி பால்ஸ், மெயினருவி உள்ளிட்ட அனைத்து அருவிகள் மற்றும் நீர்வீழ்ச் சிக்குச் செல்லும் நடைபாதைகள் நீரில் மூழ்கின. இதனால், பார்க்கும் இடமெல்லாம் வெள்ளக்காடாக மாறியுள்ளது.

கரையோர, தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல, மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து அறிவுறுத்தி வருகின்றது. 13ஆவது நாளாக நேற்றும் காவிரியாற்றில் குளிக்க, பரிசல் இயக்க மாவட்ட நிர்வாகத்தின் தடை தொடர்ந்தது.





# கமலா ஹாரிஸுக்கு பெருகுகிறது ஆதரவு!

## டிரம்ப் ஆதரவாளர்கள் திகைப்பு!

அமெரிக்கத் துணை அதிபர் கமலா ஹாரிஸை அதிபர் வேட்பாளராக பலர் ஆதரிக்கத் தொடங்கியதும், அமெரிக்காவின் தேர்தல் களம் தலைகீழாக மாறியுள்ளது.

பிரசாரத்தை தொடங்கிய ஒருவார காலத்தில் கமலா ஹாரிஸ் தேர்தல் நிதியாக 200 மில்லியன் டொலர் தொகையை திரட்டியுள்ளமை டிரம்ப் ஆதரவாளர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்க அதிபர் தேர்தல் வருகிற நவம்பர் மாதம் 5 ஆம் திகதி நடைபெற உள்ளது. அதற்கு இன்னும் 100 நாள் களே உள்ளன.

இதில் குடியரசு கட்சி சார்பில் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் போட்டியிடுகிறார்.

ஆளும் ஜனநாயகக் கட்சி சார்பில் தற்போதைய அதிபர் ஜோ பைடன் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டது. எனினும் அவரின் வயது மூப்புத் தளர்வை ஒட்டிய சில சம்பங்களால் தேர்தலில் இருந்து தற்போதைய அதிபர் பைடன் விலகிய நிலையில் ஜனநாயக கட்சியின் அதிபர் வேட்பாளராக தற்போதைய துணை அதிபரான - இந்திய வம்சாவளியை சேர்ந்த - கமலா ஹாரிஸை முன்மொழிகிறார் என அவர் அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

முன்னாள் அதிபர் பராக் ஒபாமாவும் கமலா ஹாரிசுக்கு ஆதரவு அளிக்கின்றார் எனத் தெரிவித்தார். இதையடுத்து அமெரிக்க அதிபர் தேர்தலுக்கான தனது பரப்புரையை கமலா ஹாரிஸ் தொடங்கினார்.

அவருக்கு பல்வேறு தரப்பினர் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். கமலா ஹாரிஸை அதிபர் வேட்பாளராக பலர் ஆதரிக்கத் தொடங்கியதும், அமெரிக்காவின் தேர்தல் களம் தலைகீழாக மாறியுள்ளது.

பிரசாரத்தை தொடங்கிய ஒருவார காலத்தில் கமலா ஹாரிஸ் தேர்தல் நிதியாக 200 மில்லியன் டொலர் தொகையை திரட்டியுள்ளார். இந்த நிதியை வழங்கியுள்ளவர்களில் 66 சதவீதம் பேர் முதல் முறையாக நன்கொடை அளிப்பவர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. அதே சமயம் ஒரு லட்சத்து 70 ஆயிரம் பேர் கமலா ஹாரிஸுக்கான அரசியல் தொண்டர்களாகக் களத்தில் இறங்கிப் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடத் தாமாக முன்வந்திருக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் கமலா ஹாரிஸ் அதிபர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பிறகு அதிபர் தேர்தல் குறித்து புதிய கருத்துக் கணிப்புகள் நடத்தப்பட்டன.


குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் டிரம்பை விட துணை அதிபர் கமலா ஹாரிஸ் 2 சதவீதம் அதிக புள்ளிகள் பெற்று முன்னிலையில் இருக்கின்றார் என அந்தக் கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டது.

நாளுக்கு நாள் கமலா ஹாரிசுக்கு ஆதரவு அதிகரித்து வருகிறது. இந்த கருத்துக்கணிப்பு டொனால்ட் டிரம்புக்கு எதிரான அமெரிக்கர்களின் மனநிலையை வெளிப்படுத்துவதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இது டிரம்ப் ஆதரவாளர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# தைவான் மாநாட்டில் பங்குபற்றாதீர்! ஆறு நாடுகளுக்கு சீனா எச்சரிக்கை

தைபே சிட்டி,ஜூலை 28

தைவானை தனது நாட்டின் ஒரு அங்கம் என கருதும் சீனா,அங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சர்வதேச உச்சிமாநாட்டில் கலந்து கொள்ள வேண்டாம் என ஆறு நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.



சீனாவின் கட்டுப்பாட்டில் இருந்த தைவான் 1949-ம் ஆண்டு தனிநாடாக பிரிந்தது. ஆனால் தைவானை தனது நாட்டின் ஒரு அங்கம் என கருதும் சீனா அதனை மீண்டும் இணைத்துக்கொள்ள துடிக்கிறது. இதனால் தைவான் எல்லையில் போர்க்கப்பல்களை அனுப்பி சீனா பதற்றத்தை ஏற்படுத்துகின்றது. மேலும் வேறு எந்த நாடுகளும் தைவானுடன் அதிகார பூர்வ உறவு வைத்துக் கொள்ளக்கூடாது எனவும் சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தநிலையில் அடுத்த வாரம் சர்வதேச உச்சிமாநாடு தைவானில் நடைபெற உள்ளது. இதில் 25-க்கும் மேற்பட்ட நாடுகள் கலந்து கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே பொலிவியா, கொலம்பியா, சுலோவேக்கியா உள்பட 6 நாடுகளுக்கு சீனா ஒரு கடிதம் அனுப்பியது. அந்த கடிதத்தில் தைவான் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டாம் என சீனா தரப்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது. இதனால் மாநாட்டில் அந்த நாடுகள் கலந்து கொள்ளுமா என்பது கேள்விக் குறியாகி உள்ளது.

# கனடா முரசு

பக்கங்கள் - 6

திங்கட்கிழமை 29/07/2024


## நோர்த் யோர்க்கில் சூட்டில் ஒருவர் பலி

நோர்த் யோக்கில் நேற்று முன்தினம் அதிகாலை இடம் பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

23 வயதான நபர் ஒருவரே C2▶



# சரிகின்றது ட்ரூடோவின் செல்வாக்கு!

கனடாவில் பிரதம மந்திரி ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் கட்சியினர் மக்கள் செல்வாக்கை வேகமாக இழக்கும் நிலையில் உள்ளனர் என்றும், கருத்துக் கணிப்பில் ஒரு வருடத்திற்கும் மேலாக எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொய்லிவ்ரின் கன்சர்வேட்டிக் கட்சியினரை விட விட 17 புள்ளிகள் பின்தங்கிய நிலையில் உள்ளனர் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இன்று ஒரு தேர்தல் நடத்தப்பட்டால், கன்சர்வேட்டிவ்கள், லிபரல் கட்சியினரைத் தோற்கடித்து பெரும்பான்மை அரசாங்கத்தை உருவாக்குவார்கள் என்று கருத்துக்கணிப்புகள் கூறுகின்றன. தற்போதைய வாக்குப்பதிவு தரவுகளின் அடிப்படையில் கன்சர்வேட்டிவ்கள் 212 இடங்களை வெல்வார்கள், லிபரல் கட்சி 74 இடங்களை மட்டுமே கைப்பற்றும் என்றும் கூறப்படுகின்றது.

கட்சியின் பிரபலத்தை ட்ரூடோவே பின்னடைவுக்குக் கொண்டு செல்கின்றார் என்று தோன்றுகிறது எனவும் கூறப்படுகின்றது.

ஊவுஏ நியூஸ் ஏற்பாட்டில் 'நானோஸ் ரிசேர்ச்' ஆய்வு அமைப்பு சமீபத்தில் நடத்திய கருத்துக் கணிப்பில், ஆக ஒன்பது சதவீத கனடியர்கள் மட்டுமே கட்சித் தலைமைக்கு அரசியல் ரீதியாக மிகவும் கவர்ச்சிகரமானவர் ட்ரூடோ என்று கூறியுள்ளனர். C2▶

## கனடாவில் 2 தொகுதிகளில் வருகின்றது இடைத்தேர்தல்

ஒன்று கியூபெக்கிலும் மற்றொன்று மனிடோபாவிலும் உள்ள இரண்டு கனடிய தொகுதிகளின் வாக்காளர்கள் செப்டம்பரில் இடைத் தேர்தல் வாக்கெடுப்புக்குச் செல்வார்கள் என்று பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நேற்று ஞாயிற்றுக்கிழமை அறிவித்தார்.

இந்த இரண்டு தொகுதிகளுக்கான இடைத்தேர்தலுக்குரிய பிரச்சார காலம் தொடங்கியுள்ளது.

இடைத்தேர்தல் செப்ரெம்பர் 16 இல் நடக்கிறது.

கியூபெக்கில் முன்னாள் நீதி மந்திரி டேவிட் லாமெட்டி அரசியலில் இருந்து ராஜினாமா செய்தமையால் LaSalle-Émard-Verdun தொகுதி காலியாக இருந்தது. இந்தத் தொகுதியைத் தாங்கள் வெற்றிகரமாகத் தக்க வைக்க முடியும் என்று C2▶



# ஒரு பில்லியன் டொலர்கள் முதலீட்டில் ஒட்டாவாவில் விஞ்ஞான ஆய்வு கூடம்

கனடாவின் ஒட்டாவாவில் ஒரு பில்லியன் டொலர்கள் முதலீட்டில் விஞ்ஞான ஆய்வு கூடம் உருவாக்கப்பட உள்ளது.

ஒட்டாவா தேசிய ஆய்வு பேரவையில் இந்த ஆய்வுக்கூடம் அமைக்கப்பட உள்ளது.

சமூக அபிவிருத்தி அமைச்சர் ஜின்னா சொட்ஸ் இந்த விடயத்தை அதிகார பூர்வமாக அறிவித்துள்ளார்.

ஒட்டாவாவின் மொன்றியல் வீதியில் இந்த ஆய்வு கூடக் கட்டடம் உருவாக்கப்பட உள்ளது.

விஞ்ஞான ஆய்வுகளை முன்னெடுப்பதற்காக இந்த நிலையம் பயன்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கார்பன் உமிழ்வைக் குறைக்கும், பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்த நிலையம் பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




450 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் இந்த புதிய நிலையம் அமைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்த கட்டட நிர்மாணத்திற்கான ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த கட்டடத்தின் வடிவமைப்பு நடவடிக்கைகள் இந்த ஆண்டு ஆரம்பமாகும் எனவும், நிர்மாண பணிகள் எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## நோர்த் யோர்க்கில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

ஸ்வானெ பூங்காவில் இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கி சூட்டு சத்தங்கள் தொடர்பில் பிரதேச மக்கள் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். அங்கு நபர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் இருந்தார் எனவும் அவரை வைத்தியசாலையில் சேர்த்தார்கள் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனினும் அந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.




23 வயதான மார்ஷல் பிரைன் என்ற நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என அடையாளம் காணப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## சரிகின்றது...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முந்திய வார இறுதியில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தனது சொந்த நம்பகத்தன்மை குறித்துப் பெருகிவரும் கவலைகளுக்கு மத்தியில் மறுதேர்தலுக்கான தனது வேட்பாளராகும் முயற்சியை முடிவுக்குக் கொண்டுவர எடுத்த அதிர்ச்சியூட்டும்முடிவுகளுடன்இணைந்து கனடியப் பிரதமர் ட்ரூடோவின் தற்போதைய நிலைமை ஒப்பிடப்பட்டு ஊகங்கள் கூறப்படுகின்றன.

பெருகி வரும் அதிருப்தியைச் சமாளிக்க ஒரு பெரிய அமைச்சரவை மாற்றம் வருமா? அமைச்சரவை மாற்றம் போதுமா? அல்லது ட்ரூடோ விலகிச் செல்வாரா? அப்படிச் செய்தால் அவருக்குப் பதிலாக யார்? - என்றெல்லாம் கேள்விகள் எழுந்துள்ளன.

கன்சர்வேட்டிவ்களுக்குத் தேர்தல் அதிர்ஷ்டம் திரும்பக் கிடைக்க வேண்டும் என்றால், ட்ரூடோ மற்றும் அவரது அரசாங்கம் மீள் ஒழுங்கமைப்புக்கு வழி செய்யும் பொத்தானை அழுத்த வேண்டும் என்பது தெளிவாகிறது.

அதைச் செய்வதற்கான ஒரு வழி அமைச்சரவை மாற்றமாகும்.

கனடா வங்கி மற்றும் இங்கிலாந்து வங்கியின் முன்னாள் கவர்னர் மார்க் கார்னியை அமைச்சரவையில் சேர்ப்பதற்காக பிரதமர் ட்ரூடோ பகீரத முயற்சி செய்கிறார், ஒருவேளை கிறிஸ்டியா ஃப்ரீலேண்டிற்குப் பதிலாக நிதியமைச்சராக அவர் வரலாம் என்று இம்மாத தொடக்கத்தில், பெயரிடப்படாத ஆதாரங்களை மேற்கோள் காட்டி, 'குளோபல் மெயில்' செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிதியமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட், ஒரு காலத்தில் ட்ரூடோவின் சாத்தியமான வாரிசு என்று பரவலாகக் கூறப்பட்டது. ஆனாலும் அவரது சொந்த அரசியல் செல்வாக்கு - அதிர்ஷ்டம் - சரிகின்றமை இப்போது கண்கூடாகி வருகின்றது.

அதே நானோஸ் ரிசேர்ச்சின் கருத்துக் கணிப்பு, கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட்க்கு ஏழு மாதங்களில் 18 சதவீதமாக இருந்த செல்வாக்கு சரிந்து இப்போது ட்ரூடோவுக்கு இணையாக ஒன்பது சதவீதத்துக்கு இறங்கி விட்டது என்று கூறுகின்றது.

## கனடாவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமரின் லிபரல் கட்சியினர் நம்புகின்றனர்

அந்தத் தொகுதி 2013 இல் உருவாக்கப்பட்டதிலிருந்து லிபரல் கட்சியின் சிவப்பு நிறத்தில் உள்ளது. 2015 இல் அதன் முதல் தேர்தல், இது லிபரல்களை அதிகாரத்திற்குக் கொண்டு வந்தது. அதன் பின்னர் லாமெட்டி ஒவ்வொரு அடுத்தடுத்த தேர்தலிலும் 40 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று வென்றுள்ளார்.

லிபரல் கட்சியினர் மாண்ட்ரீல் நகர கவுன்சிலர் லாரா பாலஸ்தீனியை தங்கள் வேட்பாளராக அங்கு முன்வைத்துள்ளனர்.

இருப்பினும் அவரது வேட்பாளர் நியமனம் கடந்த வாரம் சர்ச்சையை எழுப்பியது. ட்ரூடோ அவரைத் தேர்ந்தெடுத்தமையை அடுத்து மற்ற மூன்று போட்டியாளர்கள் பல மாதங்களாக வேட்புமனுப் போட்டிக்காக பிரச்சாரம் செய்தனர். ஆயினும் வேட்புமனுவுக்கான உள்கட்சித் தேர்தல் வரவில்லை.

# 43 ஆயிரம் டொலர்கள் பெறுமதியான கடிகாரத்தை அணிந்து பார்த்துவிட்டு அதனுடன் கம்பி நீட்டியவர்!

கனடாவின் ரொறன்ரோ நகரில் சுமார் 43 ஆயிரம் டொலர் பெறுமதியான கைக்கடிகாரம் ஒன்றை நபர் ஒருவர் களவாடிச் சென்றுள்ளார்.

ஆபரண விற்பனை நிலையம் ஒன்றில் இந்த திருட்டு சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கைக்கடிகாரத்தை கொள்வனவு செய்வது போன்று ஆபரண கடைக்குள் பிரவேசித்த இந்த நபர் பின்னர் கடிகாரத்தை களவாடிச் சென்றுள்ளார்.

டொரன்டோவின் பே மற்றும் ப்ளூர் வீதிகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள ஆபரண விற்பனை நிலையம் ஒன்றில் இவ்வாறு கைக்கடிகாரம் களவாடப்பட்டுள்ளது.



இந்நபர் கடைக்குள் பிரவேசித்துக் கைகடிகாரத்தை அணிந்து பார்த்தார் எனவும், பின்னர் அதற்கான பணத்தைச் செலுத்தாமல் அங்கிருந்து தப்பி சென்றுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்தேக நபரின் படம் ஒன்றைப் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

20 முதல் 25 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவரே இந்தக் குற்றச் செயலுடன் தொடர்பு பட்டிருக்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் இருந்தால் உடனடியாக அறிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# விமானப் பணிப்பெண் - பயணி முரண்பாட்டினால் 'ஏர் கனடா' சர்வதேச விமான சேவை ஒன்று ரத்து

விமானப் பணிப்பெண்ணுக்கும் பயணிக்கும் இடையே நடந்த முரண்பாட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து ஏர் கனடாவின் சர்வதேச விமான சேவை ஒன்று ரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை மொராக்கோவின் காசாபிளாங்காவிலிருந்து மாண்ட்ரீல் புறப்படவிருந்த விமானமே ரத்து செய்யப்பட்டதாக ஏர் கனடா உறுதிப்படுத்தியுள்ளது.

சமூக ஊடகங்களில் பரவும் இந்த சம்பவத்தின் வீடியோ காட்சிகள், போர்வை கேட்டார் எனக் கூறப்படும் பயணி ஒருவர் மீத் விமானப் பணிப்பெண் ஒருவர் சீறி விழுந்து கத்துவதைக் காட்டுகிறது.

ஏர் கனடா நிறுவனம், சிடிவி நியூஸ்‘க்கு அளித்த அறிக்கையில், காசாபிளாங்காவில் இருந்து மாண்ட்ரீலுக்கு வேறு பணியாளர்களுடன் விமானம் சனிக்கிழமை புறப்பட ஏற்பாடாகியிருந்தது என்று கூறியது.

“இந்தச் சம்பவத்தை நாங்கள் மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்கிறோம். இது மதிப்பாய்வு செய்யப்பட்டு, உரிய நடவடிக்கை எடுப்போம். எங்கள் வாடிக்கையாளர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறோம். மேலும் ஏர் கனடாவில் பறக்கும் போது அவர்கள் எதிர்பார்த்ததை விட இன்று அவர்களின் அனுபவம் மிகவும் பாரதூரமாக இருந்தமைக்கு மிகவும் வருந்துகிறோம்.” – ஏர் கனடாவின் செய்தித் தொடர்பாளர் கிறிஸ்டோஃப் ஹென்னெபெல் கூறினார்.

மேலும், தாமதம் மற்றும் சம்பவத்திற்காக ஏர் கனடா தனது பயணிகளுக்கு இழப்பீடு வழங்குகிறது என்றும் கூறப்பட்டது.






# ஹாலி∴பாக்ஸில் வருடாந்திர திருவிழாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஐவர் காயம்

ஹாலிஃபாக்ஸில் உள்ள அவ்றிக்வில்லியின் வரலாற்றை எடுத்துக்காட்டும் ஒரு பிரபலமான வருடாந்திர திருவிழாவில் ஒரு கூட்டத்தில் இருவர் இடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் சிக்கி பார்வையாளர்கள் ஐவர் காயமடைந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமுற்றோர் விரைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு சுமார் 10 மணியளவில், ஆண்டு தோறும் நடக்கும் அவ்றிக்வில்லி மீளிணைவு நிகழ்வில் இடம்பெற்ற இந்தப் பல சுற்றுத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து ஹாலிஃபாக்ஸ் பிராந்திய பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுத்தனர் என்று அவர்கள் தரப்பில் கூறப்பட்டது.

"இரண்டு பேர் துப்பாக்கிச் சூட்டைப் பரிமாறிக் கொண்டனர். அச்சமயம் துப்பாக்கிச் சூடுகள் சுற்றியிருந்த கூட்டத்தினுள் சென்று ஐந்து பேரைத் தாக்கின" என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

துப்பாக்கிச் சூட்டில் இடையில் சிக்கி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட ஐவரில் நான்கு பேர் 20 வயதிற்குட்பட்டவர்கள். பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் பதின்ம வயதின் பிற்பகுதியில் இருப்பவர் எனவும் பொலிஸார் கூறினார்.





# ஒலிம்பிக்கில் புள்ளிக் குறைப்புத் தண்டனையின் பின்னரும் தாக்குப் பிடிக்கின்றது கனடா மகளிர் உதைபந்தாட்ட அணி

## பங்குபற்றிய இரண்டு ஆட்டங்களிலும் கடும் போட்டிக்கு மத்தியில் வெற்றி

நியூசிலாந்து மகளிர் உதைபந்தாட்ட அணி பயிற்சியில் ஈடுபடுவதனை ட்ரோன் கமரா கொண்டு கண்காணித்தார் என கனடியப் பயிற்றுவிப்பாளர் மீது குற்றம் சுமத்தப்பட்டு அதற்காகக் கனடிய மகளிர் அணிக்கு ஆறு புள்ளிகள் ஒலிம்பிக் குழுவினால் தண்டனையாக வெட்டிக் குறைக்கப்பட்ட போதிலும் சுற்றுப் போட்டியில் தொடர்ந்து நிலைத் திருப்பதற்கான வாய்ப்பை அந்த மகளிர் அணி தனது திறமையான விளையாட்டின் மூலம் தொடர்ந்து தக்க வைத்திருக்கின்றது.

மேற்படி உளவு பார்த்த குற்றச்சாட்டில் கனடிய மகளிர் கால்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர் பெவ் பிரிட்ஸ்மென் அந்தப் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

நியூசிலாந்து மகளிர் அணி பயிற்சியில் ஈடுபடுவதனை ட்ரோன் கமரா கொண்டு கண்காணித்தார் என பயிற்றுவிப்பாளர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பரிஸில் ஆரம்பமாகும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்பதற்காக நியூசிலாந்து மற்றும் கனடிய உதைபந்தாட்ட அணிகள் பாரிஸ் சென்றுள்ளன.

பரிஸில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர் நியூசிலாந்து உதைபந்தாட்ட அணி பயிற்சியில் ஈடுபடுவதை உளவு பார்த்தார் என குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் முடியும் வரையில் பயிற்றுவிப்பாளர் பணியில் இருந்து அவர் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

போட்டித் தொடருக்கு முன்னர் நடைபெற்ற பயிற்சி நடவடிக்கைகளின் போது இவ்வாறு உளவு பார்க்கப்பட்டதாக நியூசிலாந்து ஒலிம்பிக் கமிட்டி சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியிடம் முறைப்பாடு செய்திருந்தது.

அதன் பின்னர் கடந்த வியாழன்று நடந்த குரூப் ஏ தொடக்க ஆட்டத்தில் கனடா 2-1 என்ற கோல் கணக்கில் நியூசிலாந்தைத் தோற்கடித்தது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நடந்த போட்டியில் கனடா மகளிர் உதைபந்தாட்ட அணி 2-1 என்ற கோல் கணக்கில் பிரான்ஸை தோற்கடித்ததால் இந்தச் சுற்றுப் போட்டியில் குழு நிலை ஆட்டங்களைத் தாண்டி நொக் அவுட் கட்டத்தை அடைவதற்கான கனடாவின் நம்பிக்கையை உயிர்ப்புடன் வைத்திருக்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

மகளிர் உதைபந்தாட்டத்தின் நடப்பு சாம்பியன்களான கொலம்பியாவைவரும்புதன்கிழமைநைஸில் நடைபெறும் ஆட்டத்தில் கனடா தோற்கடித்தால், தற்போதுள்ள நிலையில், குழு கட்டத்தில் கனடாவிற்கான அதிகபட்ச புள்ளி மொத்தம் மூன்று புள்ளிகளாக இருக்கும் வாய்ப்புக் கிடைக்கும்.




# பிரிட்டிஷ் கொலம்பியாவின் ஸ்லோகனிலும் காட்டுத் தீ கட்டுப்பாட்டை மீறிப் பரவுகிறது!

## பிரதேச மக்களை காலி செய்து விட்டு வெளியேற உத்தரவு

மோசமான காட்டுத் தீ கட்டுப்பாட்டை மீறிப் பரவி வருகின்றமையால் பிரிட்டிஷ் கொலம்பியாவின் ஸ்லோகன் பள்ளத்தாக்கு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த குடியிருப்பாளர்களை காலி செய்து விட்டு வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளது.

உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் காலை 8 மணிக்கு நடைமுறைக்கு வந்த இந்த உத்தரவு, கெலோனாவின் கிழக்கே சுமார் 370 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஸ்லோகன் கிராமத்தையும், சமூகத்தையும் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள 400க்கும் மேற்பட்ட சொத்துக்களைப் பாதிக்கும் என்று மத்திய கூட்டேனேயின் பிராந்திய மாவட்டம் சனிக்கிழமை பிற்பகுதியில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதிகாரிகளின் முன்னறிவிப்புக் கூற்றுப்படி, அதிக காற்று, வெப்பமயமாதல் மற்றும் உலர்த்தும் போக்கு மீண்டும் பிராந்தியத்தை கவ்வியுள்ளது. இதன் காரணமாக, பொன்டெரோசா மற்றும் முல்வே க்ரீக் இரண்டிலும் தீப்பரவல் நடவடிக்கை மேலும் தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மொத்தம் 29 சதுர கிலோமீட்டருக்கும் அதிகமான பிரதேசத்தை உள்ளடக்கிய கொமன்கோ க்ரீக் மற்றும் அய்ல்வின் க்ரீக் காட்டுத்தீகள் உட்பட பல தீகள் கட்டுப்பாட்டில் இல்லை என்று கூறப்படுகிறது.

இந்தப் பிராந்தியத்தின் தனித்துவமான நிலப்பரப்புத் தன்மை, தீயில் நேரடி தாக்குதல்களுக்கான குறிப்பிடத்தக்க பாதுகாப்பு சவால்கள் மற்றும் எதிர்பார்க்கப்படும் தீ நடத்தை ஆகியவை தற்போது நடைமுறையில் உள்ள வெளியேற்ற எச்சரிக்கையை வெளியிடக் கட்டாயப்படுத்தின எனப் பிரிட்டிஷ் கொலம்பியாவின் காட்டுத்தீ சேவை நிறுவனம் தெரிவித்தது.

# கனடாவின் கடவுச் சீட்டுகளுக்கு உலகத் தர நிலையில் ஏழாம் இடம்




குடியிருப்பு மற்றும் குடியுரிமை ஆலோசனை நிறுவனமான ஹென்லி அண்ட் பார்ட்னர்ஸ் 2024 ஆம் ஆண்டில் உலக கடவுச்சீட்டுகளின் தரவரிசையை – சர்வதேச விமான போக்குவரத்து ஆணையத்தின் தரவை உள்ளடக்கி – வெளியிட்டது.

இந்த நிறுவனம் கனடிய பாஸ்போர்ட்டை இந்த ஆண்டு உலகின் ஏழாவது சக்திவாய்ந்ததாக மதிப்பிட்டுள்ளது,

இது விசா இல்லாத பயண விருப்பங்களின் எண்ணிக்கை உட்பட பல்வேறு அளவுகோல்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

கனேடிய கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் உலகெங்கிலும் உள்ள 187 நாடுகளுக்கு விசா இல்லாத பயண விருப்பங்களை அணுகலாம், மேலும் இந்த நாடுகளில் பலவற்றில் மேலும் வேலை மற்றும் படிப்பு விருப்பங்கள் உள்ளன. கூடுதலாக பல கனேடிய கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் இரட்டைக் குடியுரிமையை வைத்திருக்கும் திறனால் பயனடைகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

செக், ஹங்கேரி மற்றும் மோல்டா ஆகிய நாடுகளின் கடவுச்சீட்டுகளுடன் இணைத்து கனேடிய கடவுச்சீட்டு இந்த இடத்தைப் பிடித்திருப்பது இது தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாகும்.